*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p115-120** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# கோமல் சுவாமிநாதன் நாடக நூலில் பெண்ணியத்தின் நிலைப்பாடு (என் வீடு என் கணவன் என் குழந்தை)

The Feminist Perspective in Komal Swaminathan's Play (My Home, My Husband, My Child)

**வ. மோ. சத்தியவதி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
விநாயகா மிஷன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பையனூர், சென்னை - 603104.
*நெறியாளர்: **ப. ஜெயபாரதி,***
*துறைத்தலைவி, விநாயகா மிஷன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*பையனூர், சென்னை - 603104.*

## முன்னுரை:

பெண்ணியம் என்பது பெண்களுக்கு எதிரான சமூகம் மற்றும் பொருளாதாரம், அடக்குமுறைகளை எதிர்த்தும் அதற்குச் சமமான உரிமைகளைப் பெற்றுத் தருவதும் கடமையாகும். இந்நிலையில் கோமல் சுவாமிநாதன் தமிழின் முக்கியமான முற்போக்கு நாடக ஆசிரியர், எழுத்தாளர், இதழாளர் மற்றும் திரைப்பட இயக்குனராகத் திகழ்ந்தவர். அவரது படைப்புகளில் முற்போக்கு சிந்தனை, சமூக விமர்சனம் பெண்ணியம் மற்றும் யதார்த்தவாதத்தை வெளிப்படுத்துகின்றன.

1971 - ல் சுவாமிநாதன் ஸ்டேஜ் ஃபிரண்டஸ் என்ற நாடகக் குழுவைத் துவக்கினார். அதில் பல நாடகத்தை அரங்கேற்றினார். அதன் பின்தான் 1977 - ல் என் வீடு என் கணவன் என் குழந்தை என்ற நாடகத்தை மேடையேற்றினார். ஏன்னென்றால் மனோரமா ஆச்சி தான் ஒரு பிராமண வேடத்தில் பேசி நடிக்க வேண்டும், என்கிற தீவிர ஆர்வத்திற்காக எழுதப்பட்ட நாடகம். இந்நாடகம் முன்னூறு முறைக்கு மேல் மேடையில் அரங்கேறியது. இந்நாடகம் சின்னத்திரை தொடராகவும் வந்தது.

## என் வீடு என் கணவன் என் குழந்தை நாடகத்தின் கதைச்சுருக்கம்:

ஒரு பிராமணக் குடும்பத்தை மையமாக வைத்தும், அந்த குடும்ப வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், பிரச்சனைகள் மற்றும் அன்பைப் பற்றியது. நாடகத்தில் அன்னபூரணியின் கணவன் மஹாலிங்கம் இந்த தம்பதியருக்கு குழந்தை இல்லை. அதனால் அன்னபூரணி, கணவனின் தம்பிகள், தங்கையைத் தன் குழந்தைகளாக வளர்த்து வருகிறாள். இதனால் குடும்பத்தில் எழும் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் சந்திக்கிறாள். இதற்குக் காரணம் இவள் இக்குடும்பத்தின் மேல் வைத்த அன்பு,

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license 

தியாகம், மற்றும் குடும்பப் பிணைப்புதான். இதற்கு இடையில் ஒரு தம்பிக்கும், தங்கைக்கும் திருமணம் நடக்கின்றது. இதில் தங்கை தன் வீட்டிலிருந்து என் அம்மா ஆண்டது எனக்குத் தான் என்று மாமியார் வீட்டிற்கு வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்ளும் சாமார்த்யத்தை எடுத்துரைக்கிறது.

மஹாலிங்கம் மன உளைச்சல் காரணமாக வேலையை ராஜனாமாச் செய்துவிட்டு ரி~pகேசம் செல்லத் திட்டமிடுகிறார். இதனை அறிந்த அன்னபூரணி நீங்கள் சென்றுவிட்டாள் எனக்கென்ன நானும் உங்களுடன் வருகிறேன் என்கிறாள். இல்லை என்றால் நான் இறந்த பிறகு செல்லுங்கள் என்று உறுதிபடக் கூறுகிறாள். ஒவ்வொரு முறை கிளம்பும் போது தடங்கல் வருகிறது. இறுதியில் கடைசி தம்பியின் காதல் கல்யாணத்தை முடிக்கிறாள். மேலும் தங்கையின் கணவன் வேறு மதத்திற்கு மாறிவிட்டதால் அவருடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தவளை சாமார்த்தியமாகச் சம்பந்தியின் உதவியுடன் கணவனுடன் வாழ அனுப்புகிறாள், அன்னபூரணி. குடும்பம் மீது மற்றுமின்றி வீட்டில் வளர்க்கும் பசுவின் கன்றும் இறந்துவிட்டதை எண்ணிக் கதறுகிறாள். அப்படியே மயக்கம் போட்டு விழுகிறாள். மருத்துவரை அழைக்கிறார்கள். மருத்துவர் வந்து அன்னபூரணியைப் பார்த்துவிட்டு கங்கிராஜூலே~ன்ஸ் நீங்க அப்பாவாகப் போறீங்க என்று மஹாலிங்கத்திடம் கூற அன்னபூரணியும் வெட்கப்படுகிறாள். என்பதோடு இறுதிக் காட்சி முடிவடைகிறது.

### முதன்மை மாந்தர்கள்

1. அன்னபூரணி - முதன்மை கதாநாயகி, “குடும்பத் தலைவி” பிறருக்காக மன உருகும் இளகிய மனம் கொண்டவள். குழந்தை பேறு இல்லாதப் பிராமணப் பெண். தன் கணவர் மஹாலிங்கத்தின் தம்பிகளையும் தங்கையையும் தன் குழந்தைகளாக வளர்த்து அவர்களுக்குத் திருமணம் செய்கிறாள். தங்கையின் கணவன் மதம் மாறியதற்காகக் கோபித்துக் கொண்டு வந்தவளையும், கடைசி தம்பியின் காதலையும் பிரச்சனைகளின்றி தீர்க்கிறாள். இவள் குழந்தை இல்லாதவளாக இருந்தாலும் குடும்பத்தை ஒருங்கிணைத்து நடத்துகிறாள், இது மட்டுமல்லாமல், வீட்டிலுள்ள மாடு, கன்று, நாய் மீதும் அன்பைக் காட்டக் கூடியவளாக இருக்கிறாள்.

2. மஹாலிங்க ஐயர்: இந்நாடகத்தின் கதாநாயகியாக விளங்க கூடியவள் அன்னபூரணியின் கணவன் மஹாலிங்கம் தான் செய்ய வேண்டிய குடும்பப் பொறுப்புகளைத் தன் மனைவியே செய்வதால் வேலைக்குச் சென்று வருவது தான் தன் கடமை என்று இருந்தார். மேலும் குழந்தை இல்லை என்ற கவலை தம்பி தங்கைக்குத் திருமணம் செய்விக்கிறார். இதனால் அதிக பாரம,; மன உளைச்சல் ஏற்படுகிறது. இதனால் வேலையை விடுத்து, ரி~pகேசம் போக வேண்டும் என்று முடிவுச் செய்கிறார்.

### துணைமாந்தர்கள்:

| | | |
|---|---|---|
| 1. கிச்சா | - | முதல் தம்பி |
| 2. மைதிலி | - | கிச்சாவின் மனைவி |
| 3. வெங்கட்டா | - | இரண்டாம் தம்பி |
| 4. சக்கு | - | ஒரே தங்கை |
| 5. சிவராம கிரு~;ணன் | - | சக்குவின் கணவன் |
| 6. ரங்கதுரை | - | சம்பந்தி |

7. ராமசுப்பு - அன்னபூரணின் தம்பி

8. கோனார் - பசு மாட்டைக் கவனிப்பர்

9. பிரணதார்த்தி - உதவி செய்பவர்

**உத்திகள்**

1. அன்னபூரணி - பிரணதார்த்திடம், அப்பா போயிட்டா அம்மாவை பிள்ளைகள் ஆதரிப்பா... அண்ணா போயிட்ட மன்னிய ஆதரிக்க யாரும் முன்னுக்கு வர மாட்டாப்பா. இவர் இங்கு இருக்கிற வரைக்கும் தான் நேக்கு இங்க மதிப்பு, - (பக்கம் எண் 17) கணவர் ரிசிகேச~ம் தன்னை விட்டு செல்லப் போவதாய் இருப்பதில் உள்ள ஆதங்கம் மட்டுமல்லாமல் வீடு என்பது ஒரு வண்டி உருண்டோட வேண்டுமானால் அச்சாணி தேவை என்பதை இச்சமூகத்தில் பெண்கள் தனித்து வாழ்வது என்பது எளிய காரியமில்லை என்பதைக் கருத்தியல் என்ற உத்தி வழியாகத் தெளிவுப்படுத்துகிறது.

2. குழந்தை வரான் ஹோட்டல்லியே சாப்டு அவனுக்கு நாக்கு செத்துப் போயிருக்கும் அவனுக்கு வாய்க்கு ருசியா ஏதாவது பண்ணிப் போடணும் அப்புறம் அவனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்:(பக்கம் எண் 99)

மைத்துனர் வருகின்றான் என்று தெரிந்தவுடன் அன்னபூரணி குடும்பத்தின் மேலுள்ள அவளின் ஒரு தாயின் அன்பும் உண்மையானப் பாசத்தையும், அக்கரையும் ஆதங்க உத்தியின் மூலம் வெளிப்படுத்துகிறாள்.

**சமூக சார் கருத்துகள்:**

• "அன்னபூரணி - மஹாலிங்கத்திடம்" அதெப்படி உமக்கு விடுதலை கொடுக்க முடியும்? நீங்க சூரியன் மாதிரி, நான் பூதக்கண்ணாடி மாதிரி உங்ககிட்டெயிருந்து ஒளியை வாங்கி என் வழியா செலுத்திண்டிருக்கிறேன். சூரிய ஒளியே போனதுக்குப்புறம் பூதக் கண்ணாடி வெறும் சோடா பாட்டில் கண்ணாடி தான்:

விக்ரஹம் திருட்டுப் போயிடுத்துன்னா கோவிலுக்குள்ள யாரும் வரமாட்டாது. ஆனால் நான் தானாக ஒளி தருபவள் அல்ல அவரின் ஒளியைப் பெருக்கிக் காட்டும் கருவி மட்டுமே நான். கணவர் ரிசிகேச~ம் தன்னை விட்டுச்செல்ல போனால் தன் நிலையை உணர்ந்து ஆதங்கத்தை வெளிப்படுத்துவது.

• "அன்னபூரணி - கிச்சாமியிடம்" வீடு நிலம் காருன்னு வாங்கினா அது சொத்துப்பா... குழந்தை பொறந்தா அது பாக்கியம். புத்திர பாக்கியம் அந்த புத்திர பாக்கியத்தை என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லாம மருந்தை சாப்பிட்டு முடிச்சுட்டேளே:

குழந்தை வேண்டாமென்று நீ மறுத்தாலும், கர்ப்பத்திற்காக இங்கே ஒரு வயிறு இருபது ஆண்டுகளாக ஏங்கிக் கிடக்கிறது என்பதை உணரவில்லையே எனக் குழந்தை இல்லாமல் ஏங்கும் ஒரு தாயின் புலம்பலாக வெளிப்படுகிறது.

• "சிவராம கிரு~;ணனிடம் அன்னபூரணி கிறிஸ்மஸ_ம் கொண்டாடலாம், தீபாவளியும் கொண்டாடலாம் தை வெள்ளிக்கிழமையும் கொண்டாடலாம் புழழன குசனையல -யும் கொண்டாடலாமா"?

சிவராமன் பண்டிகைகள் கொண்டாடறதே மனசு குதூகலமா இருக்கத்தானே? மனச எப்போதும் குதூகலமா வெச்சுண்டா பண்டிகைகளே தேவையில்லையே மாமி. பண்டிகைகள் கொண்டாடுவதற்கு மதங்கள் தடை இல்லை மனசு தான் என்பதை அன்னபூரணிக்கு விளங்குகிற மாதிரி சொன்னதை, மஹாலிங்கமும் ஆதரிக்கிறார் என்பதோடு யாரும் எம்மதத்தையும் பின்பற்றலாம் என்பது தெளிவாக்கிறது.

## பெண்ணியத்தின் வெளிப்பாடு:

என் வீடு என் கணவன் என் குழந்தை என்ற பெயரில் வந்த நாடகம், இதில் பிராமணக் குடும்பத்தின் சூழலில் பெண்ணின் தியாகம், உணர்ச்சி, பெண்ணின் அர்ப்பணிப்பு, ஆதங்கம், புலம்பல், மதப்பற்று, அன்பு போன்றவை இந்நாடகத்தில் வெளிப்படுகின்றன.

• அன்;னபூரணி - சக்குவிடம் நீ புக்காத்துக்கு போனா அங்க என் மண்டைதான் கிடந்து உருளும். அம்மா இல்லாத பொண்ணு தான் இந்த அன்னபூரணி என்ன பண்ணினா, பொண்ணை இப்படியா வளக்கறதுன்னு அங்கே என்னைச் சந்தி சிரிக்க வைப்போ - பக்கம் எண் -19 நாத்தனாரின் மேல் உள்ள அக்கரையோடு தன்னைக் கடமையிலிருந்து தவறியவள் எனக் குறைச் சொல்லக்கூடாது என்பதிலிருந்து பெண்ணிய கடமை உணர்வு வெளிப்படுகிறாள்

• அன்னபூரணி - தன் கணவனிடம் நீங்க வேலையை விட்டுட்டு வந்திட்டேள் நான் எந்த செலவேன்னு குறைக்கிறது? ஹவுஸ்டாக்ஸ், அர்பன் டாக்ஸ் இன்~_ரன்ஸ், எலெக்ட்ரிக் பில்லு இந்த பில்லெல்லாம் கட்டி முடிக்கறதுக்குள்ள போதுன்னு ஆயிடும். வரிசையாகப் பத்திரிக்கைகள் வாரம், மாதம், வரு~ம். ஆத்துல மாட்டை வெச்சுண்டே பால்கூப்பன், மளிகைக்கடை பில்லு மாசமாசம் டெலிவி~ன் டவர் மாதிரி ஏறிண்டே போறது, சபாக்களின் சஸ்க்ரிப்~ன், வரவா போறவாளுக்கெல்லாம் கல்யாணம் கார்த்தின்னு நன்கொடை, ஹோமங்கள் வேற செலவு பண்டிகைகள் வேற, திரும்பிப் படுத்தா தீபாவளி, புரண்டு படுத்தா பொங்கல். இதுல எந்தச் செலவேன்னு நான் குறைப்பேன். (பக்கம் 77)- குடும்பத்திலுள்ள பிரச்சனைகள், பொறுப்புகள் போன்றவை வருமானம் இல்லாமல் எப்படி செய்வது என்ற தன் ஆதங்கத்தைப் பெண்ணின் வழியாகப் புலம்பலை வெளிப்படுத்துகிறாள்.

•. அன்னபூரணி - தன் கணவனிடம் இத பாருங்கன்னா நாம ஒண்ணும் அத்வானத்தில் குடியிருக்கல. நாலு பேருக்கு மத்தியில் வாழ்ந்திண்டுருக்கோம். ஊருக்கு கண்யமா வாழ்ந்து தான் ஆகணும் நீங்க நாளைக்கே ராஜினாமாவை திரும்ப வாங்கிண்டு வேலையில் சேந்துடுகோ அவ்வளவு தான் நான் சொல்வேன். (பக்கம் - 78) சுற்றுவட்டாரத்தில உள்ள நிலைக்கு ஏற்ப வாழவேண்டும் என்று தன் குடும்ப கௌரவத்தைப் பெண்ணிய வெளிபாடாகக் கூறுகிறாள்.

•. அன்னபூரணி - கோனாரிடம் இத பாரு கோனாரே இனிமே பணம் கிணம்னு கேட்டு இங்க வராதே, இங்க ஒண்ணும் கொட்டிக் கிடக்கில. இவர் (கணவர்)பண்ணிட்டு வந்திருக்கிற கூத்துக்கு, நானும் தட்டை தூக்கிண்டு நாலு இடத்துப் போகாம இருந்தா அதுவே பெரிய வி~யம் உனக்கு என்ன நெருக்கடி இருந்தா எனக்கென்னா? உனக்கு ஆயிரம் நெருக்கடி இருக்கும் ஒரு நயா பைசா தர முடியாது என்றாள். (பக்கம் - 79) மன ஆதங்கத்தைக் பெண்ணிய வெளியீடாக கோபமாக பேசுகிறாள்.

•. அன்னபூரணி - கோனாரின் மனைவி உண்டா இருக்கிறாள் என்று கோனார் கூறியதுமே சிரிப்புடன் உன் ஆம்படையா பிள்ளையாண்டிருக்காளா, தலைச்சனா? அட அசடே இத ஏன் முன்னாடியே

சொல்லப்படாது? இதோ வரேன் இரு திரும்ப வந்து இந்தா நூறு ரூபாய் வெச்சுக்கோ, பணம் இல்லைன்னு கவலைப்படாதே அப்பப்போ என்னண்ட வந்து கேளு நான் தரேன் - (பக்கம் - 79) குழந்தை என்றவுடன் இரக்கம் கொள்கிறாள் என்றால் அவளின் குழந்தையின்மை என்ற பெண்ணிய ஏக்கத்தை அறிய முடிகிறது.

குறியீடுகள் •. மஹாலிங்கம்: அன்னபூரணியிடம் யார் வேணும்னாலும் எந்த மதத்தில் வேணும்னாலும் சேரலாம். நாம் மனசை நிர்மலமா வெச்சுண்டா தெய்வத்தோட ஒளி எப்போ வேணும்னாலும் யாருக்கு வேணும்னாலும் வரலாம். (பக்கம் - 89) யாரும் எம்மதத்திலும் இருக்கலாம் என்ற சமதத்துவத்தை வெளிப்படுத்துகிறார்

•. மஹாலிங்கம்: அன்னபூரணியிடம் இப்போ உலகம் முழுக்க வெள்ளம் பெருக்கெடுத்து ஓடறதுன்னு வெச்சுகோ. அப்போ நம்ம கொல்லப்பக்கத்துல இருக்கிற கிணறு எந்த அளவுக்கு நமக்கு பயன்படும்? பயன்படாதோல்யோ? அதே மாதிரி தான் லோகத்தை கடந்த பிரம்ம ஞானிகளுக்கு வேதங்கள் பயன்படறதில்லை. இத நான் சொல்லல பகவான் சொல்லியிருக்கிறார். (பக்கம் எண் - 93) மதத்தால் எந்த பிரிவும் இல்லை என்பதை அன்னபூரணிக்கு விளக்குகிறார்.

•. அன்னபூரணி - ராமசுப்புவிடம் ஐயர் இங்க ஒண்ணும் சத்திரம் கட்டிப் போட்டிருக்கல. வேலை வெட்டி இல்லாத சோம்பேறிகளுக்கெல்லாம் வடிச்சு கொட்டறதுக்கு. (பக்கம் - 51) ராமசுப்பு, அக்காவான அன்னபூரணியை ஏமாற்றி விட்டுச் சென்ற பிறகு மீண்டும் அக்காவை நாடி வந்த பிறகு கூறும் அறிவுரை.

## முடிவுரை:

என் வீடு என் கணவன் என் குழந்தை நாடகம் மனோரமாவின் குணச்சித்திர நடிப்புத் திறனை உலகுக்கு நிரூபித்தது. இந்நாடகக் கதையின் படி இவர் தியாகச் செல்வந்தி, குடும்பத்து பிரச்சனையைச் சமரசம் செய்யும் உறுதியான பெண், தைரியமான பெண், குடும்பத்தை விட்டுக் கொடுக்காத தன்மையுடையவள், மனிதர்கள் முதல் மாடு, நாயிடம் வரை அன்பைக் கொட்டியவள், கோனாரின் மனைவி பிரசவம் ஆகியிருக்கிறாள் என்பதை அறிந்தவுடன் அவளின் தயாளக் குணம் கொண்டுள்ளவள் என்று இந்நாடகம் மையப்படுது;துகிறது இத்தகைய குடும்ப பெண்கள் இருந்தால் கூட்டுக் குடும்பமும், குடும்ப உறவுகளும் எப்படி கெடும்? அன்னபூரணியின் குணத்தை அனைத்து பெண்களும் முடிந்த வரை தைரியமும், தெளிவும், நம்பிக்கையும், சரியான முடிவும் பின்பற்றினால் உறவுகள் நீடிக்கும் மகிழ்ச்சியும் பொங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

## மேற்கோள்கள்:

• செக்கு மாடுகள் பக்கம் எண் - 15 அலமேலு தண்ணீர் எடுக்க ஆற்றங்கரைக்குச் சென்றாள். அங்கு ஆற்றங்கரை பிள்ளையாரைத் தரக் குறைவாகவும் ஆணவத்துடன் பேசியதோடு மட்டுமல்லாமல் பண்ணையார் பாபநாசம் அலமேலுவைப் பாலியல் வன்கொடுமைச் செய்ததால் அவள் இறந்துவிடுகிறாள். பணக்காரர்களின் ஆணாதிக்குமும், அகங்காரமும் இருப்பதினால் இவர்களின் இழிவானச் செயலையும் கடவுளை தூற்றும் எண்ணத்தையும் வெளிபடுத்துவதால் இத்தகையோருக்கு மரணதண்டனை அளித்தால் போதும் மற்றவர்களுக்கும் இது ஒரு பாடமாகும்.

• கோடு இல்லாக் கோலங்கள் பக்கம் எண் - 70, 71 அடலிங்கம் பரிமளத்தைப் 'பசுத்தோல் போர்த்திய புலி' சாது மாதிரி நடிச்சிட்டு தப்புத் தண்டா பண்ணுது. என்றதற்கு பரிமளம் மானதோட வாழ்கிற குடும்பம். இப்படி நாகூசாம பேசாதீங்க என்றாள். அப்படி என்றால் உன் புரு~ன் யாரு? எப்ப கல்யாணம் பண்ணிக்கிட்ட? தாலியைக் காட்டு? என்று மானம் பங்கம் செய்வது - தந்தையை இழந்து வறுமையிலுள்ள ஒரு பெண், தன் தங்கையைப் படிக்க வைப்பதற்காகத் தன்னையே இழக்கவும் துணிக்கிறாள் என்றால் அவளைப் பாராட்டவும் வேண்டாம், பழிக்கவும் வேண்டாம். அமைதிக் காத்தால் நன்று. இவ்வாறு ஆராய்ந்து இழிவுச் செய்வது கூடப் பெண்களுக்கு செய்யும் வன்கொடுமைகளுள் ஒன்றாகும்.

## துணைநூற்பட்டியல்

ஆசிரியர் - கோமல் சுவாமிநாதன்

[1.] செக்கு மாடுகள் - முதற் பதிப்பு - 2024

[2.] என் வீடு என் கணவன் என் குழந்தை - முதற் பதிப்பு - 2025

[3.] கோடு இல்லாக் கோலங்கள் - முதற் பதிப்பு - 2025

KALANJIYAM